பாலர் கல்வி

தொகுதி 28 | சோபகிருதுஸு ஐப்பசி - கார்த்திகைமீ 1963 நவம்பர் | பகுதி 8

தென் இந்தியக் கல்வி வாரம்

இவ்வாண்டிற்கான கல்வி வாரம், தமிழ்நாடெங்குஞ் சிறப்புற நடைபெற்றது. சிறுர்கட்கு அளிக்குங் கல்வியின் தரத்தை எவ்வாறு ஓங்கச் செய்யலாம் என்பதைப் பொது மக்களுக்கும் பெற்ருேர்க்கும் ஆசிரியர் எடுத்துக் கூறிய வகையிலே ஆரிரியர்கள் நாட்டின் நலத்தை வளர்ப்பதில் எவ்வாறு ஈடுபட்டுள்ளார்கள் என்பது நன்கு புலனுகும். மக்களுக்குச் செல்வம் கல்வி ; இக் கல்வி நல்ல வகையிலே கற்பிக்கப்பெறவேண்டும் ; இவ்வாறு பெறுவிக்க ஊக்கங் கொள்பவர் பொது மக்களும், அரசியலாரும், ஆசிரியருமாவர். சிருர்களது மனம் கல்வியொன்றிலேயே செல்லுமாறு பொது மக்கள் உதவி செய்யவேண்டும். சிருர்கள் பெறும் கல்வி சொல்ப காலத்திலேயே யாகும்; கற்கவேண்டுவனவோ நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. அயல் நாட்டினரது கல்வி திட்டத்தை ஆராய்ந்தால் நாம் கற்பிப்பது போதாது. நாகரிகம் ஓங்கிவரும் இக் காலத்திலே விஞ்ஞானத்தின் சாதனையைக் கொண்டு நம் வாழ்வு இயங்கி வருவதால், விஞ்ஞானத்திலும், இதற்கு அடிப்படையான கணக்கிலும் நமது சிருர்கள் அதிகம் ஆற்றல் பெற வேண்டும்.சிருர்கள் தாமே சிலவற்றை ஆராய்ந்தறிவதற்கு வாய்ப்பு இருந்தால்தான், ஊக்கத்துடன் கல்வி கற்பர், எளிதிலுங் கற்பர். ஆதலால் பள்ளிகளில் ஆராய்ச்சிச் சாலைகளை நிறுவிச் சிருர்கள் ஆராய்ச்சிகள் செய்யப்போதியவாய்ப்பினை அளிக்கவேண்டும். அன்றியும் பல நூல்களைப் படிப்பதற்கு வாய்ப்பும் இவர்கள் பெற வேண்டும் ; பள்ளிகளில் வாசகசாலை வசதிகளைப் பெருக்கவேண்டும்.

அரசியலார் செய்யவேண்டுவது முக்கியமாக நவீன காலத்திற்குப் பயன்படுமாறு பாடதிட்டங்களை மாற்றுவது. கணக்கிலே மெட்ரிக் முறையைப் பின்பற்றுவதால், பழைய அளவினங்களும் வாய்ப்பாடுகளும் முறைகளும் பயனற்றவையாகும் ; இவற்றைக் கற்பிக்க முன்பு எடுத்துக் கொண்ட கால அளவிலே முன்பு செய்து வந்ததைப்போல் இப்போது இருமடங்கு செய்யக்கூடும், ஆதலால் கற்பிப்பதன் தரத்தை நன்கு உயர்த்த இயலும். விஞ்ஞானத்திலே சாமானியமாகச் சிருர்கள் கற்க வேண்டுவனவற்றை முதல் எட்டு வகுப்புக்களுக்குள்ளேயே கற்பித்துவிட்டு, பின் வரும் மூன்று வகுப்புக்களிலே இக்காலத்திற்கு அவசியமானவற்றைக் கற்பிக்கலாம். கற்பிப்பது

குறைவாகவும் அவசியமானதாகவும் இருக்கவேண்டும்; கீழ்வகுப்புக்களில் கற்பனவற்றைத் திரும்பத் திரும்பக் கற்பிப்பதால் சிறுர்களுக்கு ஊக்கங் குன்றி விடுகின்றது. பூகோளம், சரிதம் இவற்றுள் வெளிநாடுகளைப் பற்றிய விவரங்கள், வரலாறுகள் இவற்றை மிக மிகச் சுருக்கமாக எட்டு வகுப்புக்கள் வரையில் கற்பித்துப் பின்னர் நம் நாட்டு விவரங்களை நன்கு கற்பித்தால், சிறுர்களுக்கு இப்போதுள்ள சுமை நீங்கும், அவர்கள் ஊக்கத்துடன் கற்பர். கல்வியிலும் கற்பிப்பதிலும் ஆற்றலும் அநுபவமும் வாய்ந்த ஆசிரியர்கள் இது விஷயத்தில் கவனஞ் செலுத்துவது அவசியமாகும்.

ஆசிரியர்களது கடமைகளையும் பொறுப்பையும் நிலைமையையும் பற்றி எங்கும் ஆராய்ந்துள்ளார்கள். ஆசிரியர்களாகிய நாம் நமது கடமைகளை நன்கு உணர்ந்துள்ளோம். நமது நோக்கம் மிகப் பரந்தது, நம்மிடம் கற்கும் சிறுர்கள் கல்வியொழுக்கங்களிற் சிறந்தோங்கி நாட்டைப் பெருமைகொள்ளச் செய்வதென்பதாம். நாம் நமது பொறுப்பினையுணர்ந்து பணியாற்றி வருகின்ேறும். நமது நிலை மேலும் ஓங்கவேண்டும். சமூகத்தின் வளர்ச்சிக்காக நாம் கொண்டுள்ள பங்கினை யாவரும் நன்குணர்ந்து, பொது மக்கள் நமது மதிப்பினைச் சரியாக வுணர்ந்து அதன்படி நடக்கவேண்டும் நமது ஊதியத்தைக் சரியான நிலைக்குக் கொண்டுவந்தால் தான், நாம் குடும்பக் கவலையில்லாமற் பணி செய்ய இயலும். கல்வி சம்பந்தமான விஷயங்களிலே நம்மைக் கலந்துகொண்டு செய்யவேண்டுவனவற்றைச் செய்தால், கல்வியின் தரம் ஓங்கும் வகையிலே செய்யக்கூடியவற்றை எடுத்துக் கூறலாம். கற்பிப்பது சம்பந்தமான ஆராய்ச்சிகள், இவற்றை வெளியிடக் கருத்தரங்குகள், கூட்டங்கள் இவற்றில் ஊக்கங் காட்டினுல் கல்வியின் தரம் ஓங்கும். அன்றியும் வகுப்பறைகளிலே கற்குஞ் சிறுர்களது எண்ணிக்கை ஒரு வரம்பிற்குட்பட்டதாக வேண்டும்; எண்ணிக்கை வரம்பினை மீறினுல் சிறுர்களை நன்கு கவனிக்க இயலுவதில்லை. ஆசிரியராகப்பணியாற்ற வருபவர்கள் முதல்தரமான கல்வியும், ஒழுக்கமும், கடமையுணர்வும் வாய்ந்தவர்களாதல் வேண்டும். இத்தகைய ஆசிரியர்களுக்கு ஊக்கம் ஓங்குமாறு செய்தல் மிக அவசியமானது.

வெளி நாடுகளிலே கல்வியின் தரத்தை உயர்த்துவது பற்றி ஆராய்ந்து வருகின்றனர். ஆசிரியர்கள் தங்களது ஆற்றலையும் அநுபவத்தையும் பெருக்கிக்கொள்ள வாய்ப்புக்கள் அவசியம் வேண்டும். கல்வி முறைகளை அப்போதப்போது கற்க ஓய்வு நேரமும், முறைகள் பற்றிய கருத்தரங்குகள், மறுமலர்ச்சி வகுப்புக்கள் நிகழ்த்த வாய்ப்பும் வேண்டும். அந்த அந்த வட்டாரங்களிலே ஆசிரியர்கள் ஒருங்கு கூடித் தங்கள் அநுபவங்களை எடுத்துக் கூறிக் கூட்டத்தின் முடிவுகளை வெளியிடுதல் சாலச் சிறந்ததாகும்.

பாட திட்ட உட் குழு

தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகக் குழுவினரால் நியமிக்கப் பட்ட உட்குழு, அண்மையில் பள்ளி களில் கல்விக்கான பாடதிட்டம் ஒன் றினை ஆராய்ந்துள்ளது. மாணவர் களது கல்வித்திறன் குறைந்து வரு கின்றது என்று பலர் குறை கூறுகின் றனர். உண்மையை ஆராய்ந்தால், மாணவர்கள் கற்கவேண்டியது பெருஞ் சுமை என்பது எளிதில் விளங்கும். இவர்கள் கற்கவேண்டிய மொழிகள் தாய்மொழி, ஆங்கிலம், மூன்றும் மொழியாக இந்தி அல்லது வடமொழி இவற்றிற்கும் உடற்பயிற் சிக்குமே வாரத்தில் குறித்துள்ள கால வரையிலே பாதி செலவாகும்; மீதி யுள்ள காலத்தில்தான் கணக்கு, விஞ் ஞானம், சரித்திரம் முதலியன கற்றுக் கொள்ளவேண்டும். கால முன்னேற் றத்திற்கேற்ப இவற்றுள்கற்கவேண்டு வனவும் ஓங்கி வருகின்றன. இவற் றுள் அவசியமில்லாதனவற்றைக் களைந்து, பாடதிட்டத்தைத் திருத்தி யமைத்தால், கற்போரும் ஊக்கமுடன் கற்பர், ஆசிரியர்களும் அவசரப்படா மல் அமைதியுடன் கற்பிப்பர். இவை போன்ற கருத்துக்களை மனத்திற் கொண்டு, இந்த உட்குழு பின்வரும் பாடதிட்டத்தைச் சிபார்சு செய்துள் ளது. இது வருகிற நிர்வாகக் கூட்டத் தில் விவாதிக்கப்பெறும்.

6, 7, 8 வகுப்புக்களுக்குத் திட்டம்

தாய்மொழி 6 பிரியட், ஆங்கிலம் (தாய்மொழியிற் பெயர்த்தெழுவது டன்) 6+1 பிரியட், உடற்பயிற்சி 2, கைவேலை, நீதி 3, கணக்கு 5, விஞ் ஞானம் 5, சரிதம்-பூகோளம் 5.

9-ஆம் வகுப்புத் திட்டம்

தாய்மொழி 6 பிரியட், ஆங்கிலம் (தாய்மொழியிற் பெயர்த்தெழுவது டன்)6+1, உடற்பயிற்சி 2, கைவேலை, நீதி 2, கணக்கு 5, விஞ்ஞானம் 5, சரிதம்-பூகோளம் 5.

10-ஆம் வகுப்புத் திட்டம்

தாய்மொழி 6 பிரியட், ஆங்கிலம் (தாய்மொழியிற் பெயர்த்தெழுவ துடன்) 6+1, இந்தி அல்லது வட மொழி 3, உடற்பயிற்சி 2, நீதி 1, கணக்கு-சாதாரணத் தரம் அல்லது உயர்தரம் 5, விஞ்ஞானம் 3, சரிதம்-பூகோளம் 3, விருப்பப் பாடம் 5, இந்த வகுப்பின் இறுதியில் விஞ்ஞானம், சரிதம்-பூகோளம், இந்தி அல்லது வடமொழி இவற்றுள் பரீட்சை நடக் கும்; இவை 11-ஆவது வகுப்பில் கற்கவேண்டியதில்லை.

11-ஆம் வகுப்புத் திட்டம்

தாய்மொழி 7 பிரியட், ஆங்கிலம் (தாய்மொழியிற் பெயர்த்தெழுவது டன்) 7+1, உடற்பயிற்சி 2, நீதி 1, கணக்கு-சாதாரணத் தரம் அல்லது உயர்தரம் 8, விருப்பப் பாடம் 8.

6-ஆம் படிவம் முதல் 11-ஆம் படி வம் ஈருகத் தாய்மொழிக்காக உள்ள காலவரையில், வடமொழி அல்லது தென்மொழி கற்க விரும்பும் மாண வர்க்குப் பாதியளவு தாய்மொழியும், பாதி வடமொழி அல்லது தென் மொழியும் கற்பிக்கலாம் என்றும், இவ் வாறு கற்பவர்களுக்கு 9, 10 வகுப்புக் களில் இந்தி, வடமொழி (தென் மொழி இவற்றுள் இந்தி ஒன்றே கற் பிக்கவேண்டும் என்றும் சிபார்சு செய் துள்ளனர் இக்குழுவினர்.

முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை தமிழ் இலக்கணம் போதித்தல்

பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும்

(By Sri C. Ekambara Iyer, Tamil Pandit, P. S. High School.)

முதல் வகுப்பில் மாணவர்களோடு உரையாடுவதன்மூலம் பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் பேச்சளவில் விளங்க வைக்கலாம். மாணவர்களைப் பின்வருமாறு வினவுவோம்.

உன் பெயர் என்ன, தம்பீ? **கோபாலன்.** குழந்தாய், உன் பெயர் என்ன? **கமலம்.** இதை வாங்கிக் கொள். வாயில் போட்டுத் தின். நீ தின்னும் பொருள் என்ன? **கற்கண்டு.** ஸ்வாமி இருக்கும் இடத்தின் பெயர் என்ன? **கோவில்.** நீ தூங்குகிற நேரம் எது? **இரவு.** பூவின் வாசனையை அறிவது எது? **மூக்கு.** காக்கை என்ன நிறம்? **கறுப்பு.** குழந்தைகளே! இப்போது நீங்கள் சொன்னவை யாவும் பெயர்கள் அல்லவா? அப்பெயர்களை எல்லாம் சொல்லுகிறேன், கேளுங்கள்—கோபாலன், கமலம், கற்கண்டு, கோவில், இரவு, மூக்கு, கறுப்பு. இந்தப் பெயர்களைப் போலவே வேறு இரண்டு இரண்டு பெயர்கள் ஒவ்வொருவராய் எழுந்து சொல்லிப்பின் உட்கார்ந்து கொள்ளுங்கள், பார்க்கலாம்—(பிள்ளைகள் தலைக்கு இரண்டு பெயர்கள் வீதம் சொல்லுவார்கள்.) பிறகு, ஒவ்வொரு பிள்ளையையும் ஒரு காரியம் செய்யும்படி கூறுவோம்: கமலம், நில். நீ இப்போது என்ன செய்கிறாய்? (பதில்) **நிற்கிறேன்.** கண்ணு! நீ நன்றாக ஓடுவாயா? (பதில்)—ஓடுவேன். பார்வதி, நட. கோவிந்தா, பார்வதி என்ன செய்தாள்? (பதில்) **நடந்தாள்.** பிள்ளைகள் அங்கே என்ன செய்கிறார்கள், சங்கரா? (பதில்)—ஓடுகிறார்கள். பிள்ளைகளே! ஆளுக்கு ஒரு வேலை செய்து நீங்கள் செய்கிற காரியம் என்னவென்று சொல்ல வேண்டும். (செய்து சொல்லுகிறார்கள்)—குதிக்கிறேன், வருகிறேன், கூப்பிடுகிறேன், படிக்கிறேன். நீங்கள் இரண்டு மூன்று பேராய்க்கூடி நின்று ஒரு வேலை செய்யவேண்டும். பிறகு நீங்கள் செய்வதை ஒருவர் வாயால் சொன்னால் போதும். (நாங்கள்) எழுதுகிறோம், கலைக்கிறோம். தாண்டுகிறோம், (அவர்கள்) சிரிக்கிறார்கள், அழுகிறார்கள். கண்மணிகளே! இப்போது நீங்கள் பலவித வேலைகள் செய்ததாகக் கூறினீர்கள். அவைகளில் ஒரு சில வேலைகளைச் சொல்லுகிறேன், கேளுங்கள். நிற்கிறேன், ஓடுகிறேன், குதிக்கிறான், சாப்பிடுகிறாள், வருகிறீர்கள், சிரிக்கிறார்கள்.

இது காறும் எடுத்துக்கொண்ட முயற்சியால் பிள்ளைகளைக்கொண்டே பல பெயர்களையும், பல காரியங்களையும் வருவித்து விளங்கச் செய்தோம்.

இனி, இரண்டாவது வகுப்பில் பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் எழுதச் செய்து விளக்குவோம். ஒவ்வொரு பிள்ளையையும் ஒரு கேள்விகேட்டுப் பின்வருமாறு பதில் எழுதச் செய்வோம். என் பெயர் **கிட்டு.** என் தங்கை **கோமளம்.** இது ஒரு **யானை.** நான் படிக்கும் இடம் **பள்ளிக்கூடம்.** பிள்ளைகள் ஆடும் நேரம் **மாலை.** உடம்பின் ஒரு பாகம் **தலை.** நாய்க்குட்டியின்மேல் எனக்கு **ஆசை.** பசுவின் நிறம் **வெண்மை.** இவன் **சிரித்தல்** நல்லது.

பிறகு இவ்விதமாக அவர்களுக்கு அறிவுறுத்துவோம். **கிட்டு, கோமளம்** இரு ஆட்களின் பெயர்கள், **யானை** ஒரு பிராணியின் பெயர். **பந்து** என்பது ஒரு பொருளின் பெயர். **பள்ளிக்கூடம்** ஒரு இடத்தின் பெயர். **மாலை** என்பது ஒரு காலத்தின் பெயர். **தலை** என்பது ஒரு (உறுப்பு) பாகத்தின்

பெயர். ஆசை என்பது ஒரு குணத்தின் பெயர் வெண்மை ஓர் நிறத்தின் பெயர். சிரித்தல் ஒரு காரியத்தின் பெயர்.

பிள்ளைகள் ஒவ்வொருவரையும் இரண்டிரண்டு பெயர்களை எழுதச் சொல்லிக் கேட்போம்.

இரண்டு ஆட்களின் பெயர்கள், இரண்டு பிராணிகளின் பெயர்கள். இரண்டு பொருள்களின் பெயர்கள், இரண்டு இடங்களின் பெயர்கள், காலம் அல்லது பொழுதின் பெயர்கள் இரண்டு, சினை அல்லது உறுப்பின் பெயர்கள் இரண்டு, நிறங்களின் பெயர்கள் இரண்டு, தொழில் அல்லது காரியத்தின் பெயர்கள் இரண்டு.

பின்னர் வினைச் சொற்களுக்கு வருவோம். ஒவ்வொரு பிள்ளையையும் ஒரு கேள்விகேட்டுப் பின்வருமாறு விடைகள் வருவிப்போம். நேற்று நான் நன்ருய்த் தூங்கினேன். இப்போது எழுந்து படிக்கிறேன். நாளைக்குப் பள்ளிக்கூடம் கட்டாயம் வருவேன்.

கோடிட்ட இடங்களில் பின்வருமாறு எழுதச் செய்வோம்.

(நேற்று) நாங்கள் பாடினேம், நாங்கள் பார்த்தோம், நீ வந்தாய், நீங்கள் வந்தீர்கள், அவன் கேட்டான், அவன் தும்மினன், அவர்கள் குதித்தார்கள். அது எழுந்தது, அவை நின்றன. (இப்போது) நான் காண்கிறேன், நாங்கள் அலைகிறேம். நீ விழுகிருய். நீங்கள் படிக்கிறீர்கள். (நாளை) அவன் ஏறுவான். சீதை வருவாள். பிள்ளைகள் எழுதுவார்கள். ஆடு மேயும். நரிகள் ஊளையிடும்.

பிள்ளைகளுக்கு வேலை, காரியம், தொழில், வினை இவைகளுக்குப் பொருள் ஒன்றே என்பதை விளக்கி, தொழில்களைக் குறிப்பவை வினைச் சொற்கள் என்று அறிவிப்போம். முன்னே சொன்ன பெயர்கள் எல்லாம் பெயர்ச்சொற்கள் என்று கூறுவோம்.

மூன்ருவது வகுப்பில் பெயர்ச்சொற்கள் அறுவகையாக இருப்பதை நினைவுக்குக் கொண்டு வருவோம்.

பொருள் பெயர் - இராமன், சீதை, குதிரை, மரம்.

இடப் பெயர் - வீடு, தெரு, ஆகாயம், சந்து.

காலப் பெயர் - பகல், வருஷம், மாதம், மணி.

சினை (உறுப்பு)ப் பெயர்-கண், காது, வால், கிளை, பூ.

குண(நிற)ப்பெயர்—அன்பு, பெருமை, நீலம், செம்மை.

தொழில் பெயர் - ஓடுதல், ஆட்டம், பாட்டு, நடை.

மேலும், பெயர்களில் ஒன்றைக் குறிப்பன ஒருமைப்பெயர்கள் என்றும் ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பன பன்மைப் பெயர்கள் என்றும் இருப்பதையும் போதிக்கலாம். உதாரணங் காட்டவும்.

ஒருமைப் பெயர்கள் - மரம், குருவி, பெண், நாற்காலி.

பன்மைப் பெயர்கள் — மரங்கள், குருவிகள், பெண்கள், நாற்காலிகள்.

ஒருமைப் பெயர்களைப் பன்மைப் பெயர்களாக மாற்றிப் பின்வருவனவற்றை எழுதச் செய்யவும்.

நான் பாடுகிறேன் — நாங்கள் பாடுகிறேம்.

நீ பாடுகிருய்—நீங்கள் பாடுகிறீர்கள்.

அவன் பாடுகிருன்— } அவர்கள்
அவள் பாடுகிருள்— } பாடுகிருர்கள்.

அது பாடுகிறது - அவை பாடுகின்றன.

வினைச் சொற்களின் போதனையைத் தொடர்வோம். "நாம் செய்யும் காரியங்களில் சில முன்னமேயே முடிந்தவை, சில இப்போது நடக்கின்றவை, சில இனி அல்லது நாளைக்கு நடப்பவை; ஒவ்வொரு காரியத்தை

யும் செய்யும் காலம் உண்டு; அது மூன்று வகைப்படும். அவை (நடந்த) இறந்த காலம். (நடக்கின்ற) நிகழ் காலம், (நடக்கும்) எதிர்காலம் எனப் படும்" என்பவற்றை விளக்குவோம். உதாரணம் தருவோம். நான் (நேற்று) வந்தேன் (இறந்த காலம்), (இன்று) வருகிறேன் (நிகழ்காலம்), (நாளை) வருவேன் (எதிர்காலம்). இவற்றைப் பின் வரும் வரிசைகளிலும் எழுதிக் காட்டு வோம்.

	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர் காலம்
(நான்)	பாடினேன்	பாடுகிறேன்	பாடுவேன்
(நாங்கள்)	பாடினோம்	பாடுகிறோம்	பாடுவோம்
(நீ, நீங்கள்)	பாடினாய், பாடினீர்கள்	பாடுகிறாய், பாடுகிறீர்கள்	பாடுவாய், பாடுவீர்கள்
(அவன், அவள்)	பாடினான், பாடினாள்	பாடுகிறான், பாடுகிறாள்	பாடுவான், பாடுவாள்
(அவர்கள்)	பாடினார்கள்	பாடுகிறார்கள்	பாடுவார்கள்
(அது)	பாடியது	பாடுகின்றது	பாடும்
(அவை)	பாடின	பாடுகின்றன	பாடும்

நான்காவது வகுப்பில், சுட்டெழுத்துக்களால் சுட்டுப் பெயர்களும் வினாவெழுத்துக்களால் வினாப் பெயர்களும் உண்டாவதை விளக்கிக் காட்டு வோம்.

சுட்டுப் பெயர்கள்	வினாப் பெயர்கள்
அவன், அவள், அவர், அது, அவை	எவன், எவள், எவர், எது, எவை
இவன், இவள், இவர், இது, இவை	யாவன், யாவள், யாவர். யாது, யாவை

மேலும், பேசுவோன் இடம், முன் னிற்பவன் இடம், படர்ந்த (வேறு) இடத்தவன் இடம் என்பதாக இடம் மூன்றாகும் எனவும், அவை தன்மை இடம், முன்னிலை இடம், படர்க்கை இடம் எனப்படும் எனவும் கூறி, இட வகையால் பெயர்கள் மூன்றுவதையும் உதாரணங் காட்டி விளக்கவும். இவற் றில் ஒருமை, பன்மைப் பெயர்கள் என்ற இருவகையும் உண்டு எனக் காட்டவும்.

மூவிடப் பெயர்கள்

	தன்மை	முன்னிலை	படர்க்கை
ஒருமைப் பெயர்	நான், யான்	நீ, நீர்	அவன், அவள், அது
பன்மைப் பெயர்	நாம், நாங்கள், யாங்கள்	நீவிர், நீங்கள்	அவர்கள், அவைகள்

அண்ணன், தங்கை, மாமன், தாய் என்பன உறவு (கிளைப் பெயர்கள்) என்பதையும் எடுத்துச் சொல்லவும்.

" வினைச் சொற்களில் கட்டளைப் பொருளில் வருவன உண்டு. அவை களை ஏவல் வினை என்பார்கள். அவற் றில் ஒருமை, பன்மை உண்டு" என் பவைகளை எடுத்துக் கூறவும்.

ஏவல் வினை

ஒருமை—ஓடு, பார், நில்

பன்மை—ஓடும், ஓடுங்கள், பாரும் பாருங்கள், நில்லும், நில்லுங்கள்.

"வேண்டுதல், வாழ்தல், வைதல் பொருளிலும் வரும் வினைச் சொற்கள் உண்டு, அவை வியங்கோள் வினை எனப்படும்" என்றும் கூறலாம்.

வியங்கோள் வினை

வாழ்க (வாழ்தல்), தருக (வேண்டு தல்), ஒழிக (வைதல்).

அங்கங்கே ஏற்ற பயிற்சிகளைக் கொடுப்பது நன்று.

ஐந்தாவது வகுப்பில், "ஒரு பொரு ளின் பெயர் அதனோடு தொடர்பு

உடைய வேறு பொருளுக்கும் பெயர் ஆவதுண்டு, அதை ஆகு பெயர் என்று அழைப்பர், ஆகு பெயர் பல வகைப்படும்" என்று கூறி உதாரணங் களையும் பலவகை ஆகுபெயர்களையும் வருவித்துக் காட்டவும்.

	இயற் பெயர்	ஆகு பெயர்
பொருள் ஆகுபெயர்	தாமரை (கொடி)	தாமரை பூத்தது ; (பூ) பூத்தது.
இட ஆகுபெயர்	ஊர் (இடம்)	ஊர் சிரித்தது (மக்கள்) சிரித்தனர்.
கால ஆகுபெயர்	கார் (காலம்)	கார் அறுத்தான் ; (கார்நெல்) அறுத்தான்.
சினை ஆகுபெயர்	வெற்றிலை (சினை)	வெற்றிலை நட்டான் ; (வெற்றிலைக் கொடி) நட்டான்.
குண ஆகுபெயர்	வெள்ளை (நிறம்)	வெள்ளை உழுதது. (வெள்ளை மாடு) உழுதது.
தொழில் ஆகுபெயர்	வற்றல் (தொழில்)	வற்றல் உண்டான் ; வற்றல் ஆகிய (உணவுப்பொருள்) உண்டான்.

பிற ஆகுபெயர்களும் உண்டு. அவற்றை மேல் வகுப்புகளில் உணரலாம் என்று தெரிவிக்கவும்.

பெயர்களில் தேவர்களையும் மக்களையும் நாகலோகத்தவர்களையும் குறிக்கும் பிரிவு உயர் திணை என்றும், அவர்களைக் குறிக்காத உயிருள்ள பொருள்களையும் உயிரில்லாத பொருள்களையும் குறிக்கும் பிரிவு உயர்வு அல்லாத திணை (அல் + திணை = அஃறிணை) என்றும் கூறப்படும் என்பதனை விளக்கவும்.

உயர் திணைப் பெயர்

மனிதன், பையன், இராமன்

அஃறிணைப் பெயர்

மாடு, சிங்கம், பூ, மேஜை

திணையின் உட் பிரிவுக்குப் பால் என்று பெயர். உயர் திணையில் மூன்றும் அஃறிணையில் இரண்டும் ஆகப் பால்கள் ஐந்தாகும் என்று அறிவிக்கவும்.

உயர்திணை

ஆண் பால்—கந்தன், கணவன், ஆண்

பெண் பால்—வள்ளி, மனைவி, பெண்

பலர் பால்—கணவன்மார், மனைவிமார், ஆண்கள், பெண்கள்.

அஃறிணை

ஒன்றன்பால்—மாடு, கிளை

பலவின் பால்—மாடுகள், கிளைகள்.

இருவகைத் திணைப்பெயர்களிலும் ஒருமை பன்மைப் பால்கள் உண்டு என்பதை உணர்த்தவும்.

ஒருமைப் பால்

உயர் திணை—ஆண்பால், பெண் பால்

அஃறிணை—ஒன்றன் பால்

உயர்திணை—பன்மைப் பால் பலர் பால்

அஃறிணை—பலவின் பால்

பெயர்ச் சொற்கள் பொருள் வேறுபடும். பொருள் வேறுபடுதல் எட்டு வகைப்படும். அதனை வேற்றுமை என்பர் அவை முதலாம் வேற்றுமையில் தொடங்கி எட்டாம் வேற்றுமையில் முடியும். பெயர்கள் பொருளால் வேறுபடுவதைக் காட்ட அவற்றின் ஈற்றில் எழுத்து அல்லது எழுத்துக்கள் உருபுகள் என்னும் பெயரால் வந்து நிற்கும். அவற்றை வேற்றுமை உருபுகள் என்பார்கள். முதலாம் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை. முதல் வேற்றுமைப் பெயர் உருபில்லாததாய் இயற்கைப் பெயராய் நிற்கும். எட்டாம் வேற்றுமைப் பெயர் அழைக்கும் பொருளில் பெயர் விகாரப்பட்டு நிற்கும்.

வேற்றுமை		உருபு	உதாரணம்
முதல் வேற்றுமை (எழுவாய்)		—	இராமன்
2 ஆம்	,,	ஐ	இராமனை
3 ஆம்	,,	ஆல்	இராமனால்
4 ஆம்	,,	கு	இராமனுக்கு
5 ஆம்	,,	இன்	இராமனின்
6 ஆம்	,,	அது	இராமனது (இராமனுடைய)
7 ஆம்	,,	கண்	இராமன்கண் (இராமனிடம்)
8 ஆம்	,, (விளி)	—	இராமா !

வேற்றுமை உருபுகளில்பிறவற்றையும் வேற்றுமைப்பொருள்களையும்மேல் வகுப்பில் உணர்ந்துகொள்ளலாம்.

"பதங்களில் (சொற்களில்) பகாப் பதம், பகுபதம் என இருவகை உண்டு. பகுதி, விகுதி முதலிய உறுப் புக்களாகப் பிரிய நிற்பது பகுபத மாகும் பிரிக்க முடியாதது பகாப்பத மாகும். பெயர்ச்சொற்களிலும், வினைச் சொற்களிலும் இருவகைப் பதங்களும் உண்டு என்று கூறவும்.

	பகாப்பதம்	பகுபதம்
பெயர்ச் சொல்–	மண்	கண்ணன்
வினைச் சொல்–	நட	நடந்தான்

பகுபதத்தை ஆறு பிரிவுகளாகப் பிரித்து அவற்றை அதன் உறுப்புக் கள் என்பார்கள். அந்த உறுப்புக் கள் பின்வருவன.

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை சந்தி, விகாரம்.

பகுபதங்களில் ஆறு உறுப்புக்க ளும் எப்போதும் இருக்கும் என்று சொல்லமுடியாது. அவற்றில் சில குறைந்தும் வரலாம்.

பகுபதத்தில் முதலில் நிற்கும் உறுப்பு—பகுதி (முதல் நிலை).

கடைசியில் நிற்கும் உறுப்பு-விகுதி (ஈற்று நிலை). பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்கும் உறுப்பு-இடை நிலை.

சொல்	பகுதி	சந்தி	இடை நிலை	சாரியை	விகுதி	விகாரம்	பகுபதம்
பெயர்	கண்	ண்	—	—	அன்	—	கண்ணன்
பெயர்	அறி	—	ஞ்	—	அன்	—	அறிஞன்
வினை	வீழ்	—	—	—	க	—	வீழ்க
,,	கேள்	—	ட்	—	ஆன்	ள், ட் ஆக மாறியது	கேட்டான்
,,	பார்	த்	த்	—	ஆன்	—	பார்த்தான்
,,	குதி	த்	த்	அன்	அர	—	குதித்தனர்
,,	காண் (கண்)	—	ட்	அன்	அம்	காண், கண்எனக் குறுகியது	கண்டனம்
,,	போ	—	(இ)ன்	—	ஆர்	இன், இதில் இ கெட்டது	போனார்
,,	தா (தரு)	—	வ்	—	ஆன்	தா, தருவென மாறியது	தருவான்

(*Continued on Cover Page*)

எகோ (ECHO)

[சென்னை Educational Echo செப்டம்பர் வெளியீடு]

(ஆகஸ்ட் வெளியீட்டின் தொடர்ச்சி)

இராஸ்மஸ் என்னும் அறிஞரின் கருத்துப்படி, மாணாக்கர்க்கு மகிழ்ச்சியை ஊட்டுதல், கற்பித்தல், உணர்ச்சியூட்டுதல் என்னும் மூன்று கடமையையும் ஆற்றல் வேண்டும். முதலிரண்டு பணிகளை எந்த ஆசிரியரும் செய்யலாம். ஆயின், ஈடற்ற சான்றோரே இறுதிப்பணியைச் செய்ய இயலும். பேரறிஞர் ப்ளேடோ கூறியுள்ளது போன்று, தீப்பிடிக்கும் பொருள்களில் பற்றுமாறு தீப்பொறிகளை எறிதற்கும், பிறர்கையில் மாறிச் சென்றுகொண்டேயிருக்குமாறு தீப்பந்தங்களைக் கையில் தாங்குதற்கும் அச் சான்றோர்களே உரியவராவர்.

அரசியலதிகாரியும் ஆசிரியர்தரமும்

பெரும்புகழ்பெற்ற புலவரும் அரசியலதிகாரியுமான Dr. C. E. பீபி என்பவர், 'பனோரமா' சஞ்சிகையின் அண்மைவெளியீடொன்றில், ஒரு கல்விமுறையின் சரித்திரத்தில் தாம் கண்ட முன்னேற்றப்போக்கினை விளக்கியுள்ளார்.

அக் கல்வித்திட்டத்தின் முதற்கட்டத்தில், திண்ணைப்பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டன. ஆங்குப் போதனாமுறைப்பயிற்சியும் நல்ல கல்வியும் பெறாத ஆசிரியர்களே இருந்தனர். அவர்கள் பெரும்பாலும் பொருளற்ற சொற்களைப் பயன்படுத்தினர். கற்பிக்கப்படுங் கருத்துக்கள் மிகச்சில; கல்வியின் தரமும் மிகத் தாழ்ந்தது. இவையே அப் பள்ளிகளின் சிறப்பியல்புகள்.

இரண்டாங்கட்டத்தில், அத் திண்ணைப்பள்ளிக்கூடங்கள் 'மாமூல்-கல்வி'க்கு இடங்கொடுத்தன. இப் பள்ளிகளில் நல்ல கல்வியைப் பெறாத, ஆயின், போதனாமுறைப்பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் கற்பித்துவந்தனர். அவர்கள் வரையறுத்த பொருள் உள்ள குறியீடுகளையும், கட்டுப்பாடான முறைகளையும், ஒரேயொரு பாடப்புத்தகத்தையும் பயன்படுத்தினர்; படித்தல், எழுதுதல், கணக்குப்போடுதல் இம்மூன்றிலும் மிகக் கவனஞ்-செலுத்தினர்; மனப்பாடஞ்செய்தலை வற்புறுத்தினர். மாணாக்கர் அதில் மேலெழுந்தவாரியாகப் பரீட்சைசெய்யப்பட்டனர். குழந்தைகளின் வாழ்க்கையின் உணர்ச்சியடிப்படையைப் புறக்கணித்தனர். அவர்கள் செய்த வேலையை மேற்பார்வையிடப் பலர் இருந்தனர்.

மூன்றாங்கட்டத்தில் 'மாமூல் கல்வி' பொருள்நிரம்பிய கல்விக்கு இடங்கொடுத்தது. நல்ல கல்வியறிவும் போதனாமுறைப்பயிற்சியும் பெற்ற ஆசிரியர்கள் இப்பள்ளிகளில் பணியாற்றிவந்தனர்; மாணாக்கர் பொருளும் விளக்கமும் பெறுமாறு கற்பித்தனர்; பரந்த கல்வித்திட்டத்தை வகுத்தனர்; கருத்துக்களிலும் கற்பிக்கும் முறைகளிலும் சிறந்த மாறுபாடுகளைப் புகுத்தினர். மாணாக்கருக்குத் தனித்தனியே கற்பித்தனர்; குழந்தைகளின்

நுண்ணறிவைப் பயன்படுத்தும் முறைகளைக் கையாண்டனர்; அவர்களின் அறிவை நன்கு பரிசோதித்தனர். குருட்டுக்கட்டுப்பாட்டினைத் தளர்த்தினர்; உணர்ச்சி, அழகு, அறிவு இவற்றில் கருத்தைச் செலுத்தினர்; சமூகத்தோடு நெருங்கிய தொடர்பினைப் பெற்றிருந்தனர்.

சில தேசங்களுக்குப் பாடத்திட்டங்கள், பாடப்புத்தகங்கள், ஆசிரியர்களுக்குப் போதனுமுறையைக் கற்பித்தல் இவற்றைப்பற்றிய அறிவு தாமதமின்றி அளிக்கப்படவேண்டுமாயின், அந் நாட்டு ஆசிரியர்களுக்கு முன்னேற்றம் அடைதற்குரிய ஆற்றல் இருக்கின்றதா என்பதனை ஆராய்ந்தறிந்தபின்னரே, அவ்வறிவுரையை அளித்தல்வேண்டும்—என்று அவர் இறுதியில் கூறியுள்ளார்.

அலட்சியபுத்தியுள்ள ஆசிரியர்கள் கல்வியின் வளர்ச்சிக்குத் தடங்கல்செய்து அதனைக் குறைக்கின்றனர் என்பதும், முதல்தர ஆசிரியர்கள் முன்னேற்றத்துக்குப் பாடுபடுகின்றனர் என்பதும் அவ்வதிகாரி செய்த ஆராய்ச்சியின் முடிவு என்று அறிகின்றோம். Dr. பீபி எழுதிய இக்கட்டுரையை ஒவ்வொரு பாராளுமன்றவுறுப்பினரும் மந்திராலோசனைசபையங்கத்தினரும் ஆசிரியரும் அவசியம் படித்தல்வேண்டும் என்று கட்டாயப்படுத்த எனக்குச் சக்தியிருத்தல் வேண்டும் என்பது என் அவா. அவர்கள் அதனைப் படிப்பின், கல்வியின் வளர்ச்சி, பிற எல்லாவற்றையும்விட, ஆசிரியர்களின் தரத்தையே பொறுத்துள்ளது என்று உணர உதவும்.

ஐந்து கட்டளைகள் (The Five Commandments):

ஆங்கிலக்கல்லூரிமாணுக்கனொருவன், தனக்குப் பரீட்சைவினுத்தாளாகப் பத்துக்கட்டளைகள் அனுப்பப்பட்டன என்றும், அவற்றுள் எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்கலாம் என்று அவ் வினுத்தாளில் குறிக்கப்பட்டிருந்தது என்றும் கனுக்கண்டதாக நான் கேள்விப்பட்டேன். இன்று அரசாங்கங்களுக்கும், உள்ளூர் அதிகாரிகளுக்கும், முதலாளிகளுக்கும் ஐந்து கட்டளைகளைக் கொடுக்க விரும்புகின்றேன். அவர்கள் தலைசிறந்த ஆசிரியர்களையும் சிறந்த கல்வித்தொண்டினையும் விரும்புவராயின், அவ்வைந்து கட்டளைகளையும் ஒன்றனையும் விடாமல் நிறைவேற்றல் வேண்டும்.

முதற்கட்டளை :

முதற்கட்டளை வருமாறு: "நீங்கள் உங்கள் நாட்டில் உள்ள "ஆசிரியர்களை நன்கு கற்கும்படி செய்யுங்கள்!" 'ஓ! நாங்கள் அவ்வாறு செய்கின்றோமே!! என்று அரசாங்கங்கள் கூறலாம். அதற்கு நான் கூறும் மறுமொழி வருமாறு: "நீங்கள் அவ்வாறு எப்பொழுதும் செய்வதில்லை. போதுமான ஆசிரியர்கள் கிடைக்கவில்லையெனின், பள்ளிக்கூடங்களில் சேர்க்கவேண்டிய மாணவர்தொகையைக் குறைத்துவிடுவீர்கள்; பாடத்திட்டங்களைச் சுருக்கிவிடுவீர்கள்; இறுதிப்பரீட்சையின் தரத்தைத் தாழ்த்திவிடுவீர்கள்; தகுதி சிறிதுமில்லாதவர்களையும் ஆசிரியர்களாக நியமித்துவிடுவீர்கள்; உலகம்முழுதும் பல்லாயிரக்கணக்கான பள்ளிகளில் இவ்வாறு செய்திருக்கின்றீர்கள். யாரும் கற்பிக்கலாம்-என்றோ, ஆசிரியர்களை, இயந்திரசாலைகளில் வேலைசெய்கின்ற தொழிலாளிகளைப்போல் சிறிது எண்ணெயையும் சில கருவிகளையும் பயன்படுத்தும் முறையைக்

கற்பித்தால் போதும்—என்றே நீங்கள் கருதின், தலைசிறந்த கல்வியில் நம்பிக்கையுடையவர்களாக உங்களை நாங்கள் மதிப்போம் என்று எதிர்பார்க்கக்கூடாது.''

இரண்டாங்கட்டளை :

இது இரண்டாங் கட்டளை : '' நீங்கள் உங்கள் ஆசிரியர்களுக்கு நியாயமான ஊதியத்தை அளியுங்கள்.'' முப்பதாண்டுகளுக்கு-முன்னர் மேல்நாடுகள்பலவற்றுள், பிறதொழில்களுக்கு இன்றியமையாத கல்வியைப் பெறவேண்டிய பொருள் தம்மிடம் இல்லாத காரணத்தால், பலர் ஆசிரியர்தொழிலை மேற்கொண்டனர். இப்பொழுது கல்விக்குரிய வாய்ப்புக்கள் மிகுந்துவிட்டன. முப்பதாண்டுகளுக்குமுன்னர் ஆசிரியர்கள் நிரம்பச் சம்பளம் பெற்றனர் ; அவர்களுக்கு உத்தியோகம் போய்விடுமோ என்னுங் கவலை இல்லை ; விடுமுறைநாட்களுக்கும் நோய்வாய்ப்பட்ட காலத்துக்கும் ஊதியம் அளிக்கப்பட்டது ; அவர்களைக் குறிப்பிட்ட வயதிற்கு மேற்பட்டும் வேலைக்கு வைத்துக்கொண்டனர் ; இக் காரணங்களால் மற்றைத் தொழில்களைவிட இத் தொழில் அதிகக் கவர்ச்சிகரமாக இருந்தது ; அதனால் ஆசிரியர்கள் எளிதில் கிடைத்தனர். இப்பொழுதோ பிறதுறைகளிலும் உயர்ந்த சம்பளம் கொடுக்கப்படுகின்றது. ஆசிரியர் பெறுவதைவிட அதிக நன்மைகளை மற்றையோர் பெறுகின்றனர். ஆதலின், இப்பொழுது ஆசிரியர்தொழில் அவ்வளவாக மக்கள்மனத்தைக் கவரவில்லை. உண்மையை ஆராயுமிடத்து, சென்ற தலைமுறைவரலாற்றிலிருந்து ஒரு பொருளாதாரவிதியை யூகித்து வகுக்கலாம் ; 'பிறர் வருந்தும்பொழுது, ஆசிரியர் வளம்பெற வாழ்கின்றனர் ; பிறர் வளம்பெற வாழும்பொழுது, ஆசிரியர் வறுமையால் வாடுகின்றனர்-என்பதே அவ்விதி. இனி, அரசாங்கங்கள் ஓர் உண்மையை உணர்தல் வேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றேன். இனி நல்லாசிரியரைப் பெறுதல் எளிதன்று. அதற்குக் காரணம் குறைந்த (வாழ்க்கைக்குப் பற்ருத) சம்பளமேயாகும். தலைசிறந்த கல்வியை அளித்தல் வேண்டும் என்னுங் கவலை உங்களுக்கு உளதாயின், 'யார்க்ஷயர்'வாசியொருவர் செய்த பிரார்த்தனையை அறிந்துகொள்ளுங்கள் : '' இறைவா, நீ பல பொருள்களால் எங்களைச் சோதித்து வருத்திவிட்டாய் ! இப்பொழுது எங்களுக்குச் சிறிது செல்வப்பொருளைக் கொடுத்துச் சோதித்துப்பார் !''—என்பது அப் பிரார்த்தனை.

மூன்ருங்கட்டளை :

இது மூன்ருங்கட்டளை : '' ஆசிரியர்களைக் கற்பிக்கும்படி உற்சாகமூட்டுங்கள்.'' புதிய விவிலிய நூலும் இதனையே அறிவிக்கின்றது. 'ஆசிரியர் தாம் பெற்ற அறிவனைத்தையும் கற்பித்தற்கே பயன்படுத்தல் வேண்டும்'—என்பது அவ்வறிவுரை. அது அவ்வாறு இருக்கும்பொழுது, அரசாங்கங்கள், பிறரால் செய்யக்கூடிய இழிந்த வேலைகளிலும் கணக்கெழுதுவதிலும் தம் அரிய நேரத்தைப் பாழாக்கும்படி ஆசிரியர்களை ஏன் கட்டாயப்படுத்துகின்றன ? ஆசிரியர்ஒருவர் தம் தொழிலைப் பலரும் மெச்சும்படி செய்யின், அவரை மேற்பார்வையாளராகவோ அரசியலதிகாரியாகவோ உயர்த்தி, அவர் கற்பிக்குந்தொழிலை நிறுத்தும்படி ஏன் செய்தல் வேண்டும் ? இதுதான் ஆசிரியர்துறைக்கு அளிக்கும் பரிசா ? அவர் அத்துறையிலேயே தம் ஆயுள்முழுதும் இருக்கும்படி செய்தல் ஆகாதா ? '' சிறந்த முறையில் கற்பிப்பதைப் போற்றிப் பாதுகாக்க வேண்டுமாயின்,

உங்கள் கல்வித்திட்டத்தை அதற்கேற்றவாறு வகுத்து அமைத்துக்கொள் ளல் வேண்டும்'' — என்பதே யான் அரசாங்கங்களுக்குச் செய்துகொள்ளும் வேண்டுகோள்.

WCOTP-இன் நிர்வாகக் குழு

நாலாங்கட்டளை:

நாலாங்கட்டளை பின்வருவது: "நீங்கள் உங்கள் ஆசிரியர்களை நம்புங்கள்". அடிமைகளும் பொம்மைச்சித்திரங்களும் உரிமையுள்ள மக்களுக்குக் கற்பிப்பின், அது வெற்றியைத் தாராது என்பது வெளிப்படை. அரசாங்கங்கள், இவ்வுண்மையை உணர்ந்திருந்தும், வேண்டுமென்றே ஆசிரியர்களின் உரிமையைக் கட்டுப்படுத்துகின்றது. அளவுக்கு மீறிய மேற்பார்வையாளரை நியமித்தல், பெற்றோருக்கும் கல்விச்சாலைகளை நடத்துஞ் சங்கங்களுக்கும் மிக்க அதிகாரத்தை அளித்தல், பரீட்சைக்குழுக்களுக்குத் தனிச்சக்தியைக் கொடுத்தல், பாடப்புத்தகங்களையும் பாடத்திட்டங்களை-யும் கற்பிக்கும் முறையையும் வகுத்தமைத்தல் முதலிய பல்வேறு உபாயங்களால் ஆசிரியர்உரிமை பாதிக்கப்படுகின்றது. "ஆசிரியர்கள் தாமே ஆராய்ந்து செய்யவேண்டுவதை, பிறர் சிந்தித்து இன்னது செய்தல் வேண்டும் என்று விதித்தால், அவர்கள் நன்முறையில் தம் கடமையைச் செய்யார். ஆசிரியர்களை நம்பினல், அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாவர்''—இக் கருத்தினை அரசாங்கங்கள் உள்ளத்தில் இருத்திக்கொள்ளல் வேண்டும்.

ஐந்தாங்கட்டளை :

இது ஐந்தாங்கட்டளை: "நீங்கள் உங்கள் ஆசிரியர்களை அடிமைகளாக நடத்தாமல், கூட்டாளிகளாக மதித்து மேன்மையுடன் நடத்துதல் வேண்டும்." அரசாங்கங்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே நல்ல நெருங்கிய தொடர்பும் ஒத்துழைப்பும், தனித்தும் சேர்ந்தும், இல்லையெனின், தலைசிறந்த கல்வித்திட்டத்தை அமைத்தல் இயலாது. ஆசிரியர்களைக் கூட்டாளிகளாகவும் தோழர்களாகவும் மதித்து நடத்தினால், அவர்களைக் கலந்தாலோசித்தால், அவர்களுக்குப் பொறுப்பினை அளித்தால், அவர்களும் அவற்றிற்குத் தக்கவாறு கண்ணியத்தோடு தம் கடமையைச் செவ்வனே செய்வர் ; அனைவரும் ஒத்துவாழ்வர் ; நல்ல கல்விப்பயனும் கிட்டும். அவ்வாறின்றி, அவர்களை வெறுத்து அலட்சியஞ்செய்யின், அவர்களுக்குரிய பெருமையையும் அதிகாரத்தையும் அளியாமலிருப்பின், "அதிகாரம் ஒருவனைக் கெடுக்கும் ; உரிய அதிகாரமின்மை முற்றிலும் கெடுக்கும்'—என்று 'அட்லாய் ஸ்டீவன்ஸன்' கூறிய சொற்களின் உண்மை நன்கு புலப்படும் ; ஆசிரியர்கள் வருத்தமும் ஆத்திரமும் அடைவர் ; பொறுப்பற்ற முறையில் நடப்பர் ; அதனால், கேடு விளைவது, குழந்தைகளுக்கே. அரசாங்கங்கள், நாம் முன்னர்க் கூறியவாறு, ஆசிரியர்க்குரிய மதிப்பினையும் பொறுப்பினையும் அளிப்பின், அச் செயல் ஆசிரியரின் தொழில்தன்மானத்தை, வளர்த்து உற்சாகமூட்டும் ; குழந்தைகளும் முதல்தரக் கல்வியைப் பெறுவர்.

ஆசிரியர்க்கு இடுங் கட்டளை :

அரசாங்கங்களுக்கு ஐந்து கட்டளைகளை விடுத்தேன் ; இனி, ஆசிரியர்க்கும் ஒன்று விடுக்கின்றேன். அது எல்லாவற்றிலும் சிறந்தது. "ஆசிரியர்காள், நீங்கள் கற்பிப்பதைச் சிறந்த பணியாகக் கொள்ளல் வேண்டும்." Dr. R. H. டானி என்னும் அறிஞர் பின்வருமாறு கூறியுள்ளார் : "இன்று காணப்படுங் கைத்தொழிலுக்கும் உத்தியோகத்துக்கும் உள்ள வேற்றுமையை அறிவது எளிது ; தெளிவானது. பின்னது, சிறிது குறையுடன் காணப்படினும், கடமையை ஆற்றுதற்கு நன்கு ஆராய்ந்து அமைக்கப்பட்டது. உலகத்தில் உள்ள ஆசிரியரனைவரும், 'நம் தொழில், கடமைகளை நன்கு ஆற்றுதற்கு வகுக்கப்பட்டதேயன்றி, நம் உரிமைகளை உறுதிசெய்துகொள்ளுதற்குமட்டும் அன்று' என்று உண்மையாக நம்புகின்றனர்.

நாம் கற்பிக்குந் தொழிலை ஜீவனோபாயம் என்றுமட்டும் கருதவில்லை; தனிமனிதருக்கும் சமூகத்துக்கும் செய்யுஞ் சேவை என்றே மதிக்கின்றோம் ; இத் தொழிலுக்கும், இதன் வளர்ச்சிக்கும், இதன் மிகச் சிறந்த உறுப்பாகிய ஆசிரியரின் தொடர்ந்த முன்னேற்றத்துக்கும் வேண்டிய பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆசிரியரின் தரத்தை உயர்த்துதற்கு, நாம் நம்மையே உயர்த்திக்கொள்ளல்வேண்டும் ; பழைய மாமூல்முறையையும் பெற்றுள்ள சிற்றறிவையும் சிறந்தன என்று போற்றுதல், அதிகாரவர்க்கத்தினருக்கு அஞ்சிக் கீழ்ப்படிதல் ஆகிய இந் நோய்களைத் தொலைத்தல்வேண்டும்.

"ஒருவர் தம் அறுபது வயதுவரை தம் கருத்தொன்றனையும் கூறியதில்லை; பின்னர், அவர் கூறுவதும், நூருண்டுகளாகத் தம் முன்னோர்

அநுபவத்தில் சிறந்தது என்று கூறியதேயாகும்''—என்று அறிஞர் டிஸ்ரேலி, தாம் எழுதிய நவீனமொன்றில் கூறியுள்ளார். அந்நிலையில் உள்ள ஆசிரியர்சிலரை நான் சந்தித்திருக்கின்றேன்.

நாம், மருத்துவர்போன்று, வெளிப்படையாகப் புகழ்பெறுதல் வேண்டுமாயின், அறிவெல்லையில் நல்ல மாறுதல்களை வரவேற்றல்வேண்டும்; அவைகளை மாற்ற நாமும் உதவுதல்வேண்டும். உண்மையாக ஆராய்ந்து அறியப்பட்ட கொள்கைகளில் ஐயங்கொள்ளலாகாது; ஆராய்ந்து துணியப்படாத அறிவினும் ஆராய்ந்து துணிந்ததனை நம்புதல் நலம். ஆயின், ஆசிரியர்சிலர் ஆராய்ச்சிமுடிவுகளை ஏற்க மறுக்கின்றனர். இப்பொழுது எனக்கு ஒன்று நினைவுக்கு வருகின்றது. ஒருத்தி தன் கணவனை நோக்கி, ''இன்னது செய்வது என்று எனக்குத் தெரியும். நீங்கள் பலவற்றைச் சொல்லி என் மனத்தைக் குழப்பாதீர்கள்!'' என்று கூறினளாம்! இவ்வாசிரியர்கருத்தும் அதைப் போன்றுளது! ஆயின், ஆராய்ச்சி வகுப்பறைக்கல்வியை ஆதாரமாகக் கொண்டது எனின், கற்பிக்குந் தொழிலுக்குத் தொடர்புடையதாயின், ஒருபகுதியோ முழுதுமோ ஆசிரியர் மேற்கொண்டு செய்ததாயின், அது தொழில்வளர்ச்சிக்கும் தலை-சிறந்த கல்விக்கும் உதவுங் கருவியாகும்.

நம் தொழிலும் பெருமையடைதல் வேண்டுமாயின், மருத்துவர்க்கும் நியாயவாதிகளுக்கும் அளிக்கப்படும் சட்டபூர்வமான உயர்நிலையுரிமைகள் பொறுப்பு எல்லாவற்றையும், ஆசிரியருக்கும் அரசாங்கங்கள் அளித்தல் வேண்டும். எந்த அரசாங்கமும் இதனைச் செய்தற்குரிய ஞானத்தைப் பெற்றதாகத் தெரியவில்லை. ஆயின், நாம் அதனைச் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கின்றது.

தொடக்கப்பள்ளியிலோ கல்லூரியிலோ எங்குக் கற்பித்தாலும், கற்பிக்குந் தொழில் ஒன்றே என்பதனை நாம் ஒருபொழுதும் மறத்தலாகாது. இதில் உயர்வுதாழ்வு இல்லை. நாமனைவரும் ஒரே இனத்தவர் என்று கருதுதல் வேண்டும். பல ஆண்டுகளுக்குமுன், 'பிரிட்டிஷ் மருத்துவச் சங்கத்'தை ஸ்தாபித்தவர்களுள் ஒருவரான Dr. ஹேஸ்டிங்ஸ் என்பார், ''மருத்துவர், தம் தொழிலை முன்னேற்றுதற்கு முன்னர், தம்மிடையே உள்ள அற்பச்சண்டைச்சச்சரவுகளை மறந்து, ஒன்றுபட்டு ஒத்துழைத்தல் வேண்டும்'' என்று இங்கிலாந்தில் கூறினர். இவ்வறிவுரை ஆசிரியர்க்கும் பொருந்தும். பலவகைக்கலைக்கூடங்களில் பணியாற்றும் நாம் ஒன்றுபட்டு உழைப்பின், நம்முள் ஒருவர்க்கொருவர்தொடர்பினை நன்கு அறிந்துகொள்ளலாம்; நாம் நம் கருத்தினை ஒருமித்த குரலில் கூற-லாம்; நமக்குள் ஒருவரை மற்றொருவர் தாக்குதலில் நம் வலிமையைச் செலவிட்டுப் பாழ்படுத்தாமல், அதனைக் குழந்தைகளையும் ஆசிரியர்களையும் உயர்த்த நன்கு பயன்படுத்தலாம்; நம் வலிமையும் மிகுதியாகும்.

தலைசிறந்த கல்வியின் இலக்கணம் யாது என்பதைப்பற்றி என் கருத்தினை வெளியிட்டுவிட்டேன். அது அரசுகள், ஆசிரியர்கள் இவர்-களின்மேல் பெரும்பொறுப்பினைச் சுமத்துவதனால், இக் குறிக்கோளை அடைதல் மிக அரிது. ஆயின், நம்பிக்கையின்மைக்கோ மனத்தளர்ச்சிக்கோ ஏமாற்றத்துக்கோ நாம் இடந்தரலாகாது. நாம் திரும்பிப் பார்ப்போமாயின், கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளோம் என்பதற்

Continuad on Cover Page

எகோ (ECHO)

[சென்னை Education Echo
செப்டெம்பர் வெளியீடு]

WCOTP–
பன்னிரண்டாம் மகாநாடு

WCOTP-பிரதிநிதிகளின் பன்னிரண்டாம் மகாநாடு ரியோ நகரில் ஆகஸ்டு 7–13-இல் கூடிற்று. எழுபது நாடுகளிலிருந்து வந்த நானூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் அம் மகாநாட்டில் கலந்துகொண்டனர். ஆங்கு முதல்தரக் கல்வி-போதனைக்கு இன்றியமையாது வேண்டிய நிலைகளைப்பற்றித் தீவிரமாக ஆராய்தற்குப் பல கூட்டங்கள் கூட்டப்பெற்றன. இம் மகாநாடு தென்அமெரிக்காவில் கூடுவது இதுவே முதல் தடவையாகும். அம் மகாநாட்டின் முடிவில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பொது-முறையிலும் தொழிற் சிறப்பு முறையிலும், தக்க நெறியில் ஆசிரியருக்குப் பயிற்சியளித்துத் தகுதிபெறச் செய்வதன் அவசியம், ஆசிரியத்தொழிலின் உயர்-நிலைக்குப் பொருத்தமான சம்பளம், ஆசிரியருக்கு அளிக்கப்படும் அறிவுரிமை, ஆசிரியர்சங்-கங்கள் தொண்டுசெய்வதற்குரிய மிக உயர்ந்த நிலைகள்—இவற்றைப்பற்றியவை அத் தீர்மானங்கள்.

பிரேஸில் நாட்டு ஐக்கிய இராச்சியங்களின் குடியரசுத் தலைவரான திரு. ஜோவா கௌலார்ட் என்பவரின் பிரதிநியான பேராசிரியர் டார்ஸி ரிபேரோ அம் மகாநாட்டைத் திறந்துவைத்துப் பிரஸங்கஞ்செய்தார்; "பிரேஸில் நாடு தன் சரித்திரத்தில் தீர்மானமான முடிவினை மேற்கொள்ள

வேண்டிய நிலையில் இன்று உளது. இக்காலத்தில்தான் கல்விக்குச் செய்ய வேண்டிய கடமையைப்பற்றி அனுபவத்திற்கு ஒட்டிய மிக்க அறிவை அடைய இருக்கின்றது; இந் நாடு முன்பு முன்னேற்றம் அடையாதது; வறுமையும் அறியாமையும் நிரம்பியது. ஆயின், இப்பொழுது சிறுகச்சிறுக வளர்ச்சியைப் பெற்றுவருகின்றது; கல்வியின் முக்கியத்துவத்தை நன்கு அறிகின்றது; 'முதல்தரக்கல்விபோதனைக்கு இருக்கவேண்டிய வேலைநிலை' —என்னும் பொருள்பற்றி இம் மகாநாட்டில் ஆராய்வது என்பதனை எங்கள் நாட்டில் வைத்துக்கொண்டது மிகச் சிறந்ததாகும்"—என்று கூறினர்.

WCOTP-இன் தலைவரான ஸர் ரோனல்டு கௌல்டு, தம் இணையற்ற சொற்பொழிவில், முதல்தரக்கல்விக்கு இன்றியமையாத பகுதிகளை வற்புறுத்திக் கூறி, 21-ஆம் நூற்றுண்டில் வரப்போகுஞ் சிக்கல்களைச் சமாளிப்பதற்கேற்ற அறிவுபடைத்த மக்களை இன்றைய கல்வி உண்டாக்குதல் வேண்டும் என்று கூறினர்.

ஸ்ரீ எஸ். நடராஜன் அவர்கள் (இந்தியா) WCOTP-இன் உபதலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு. தாய் ஸுங் (கொரியா) பஸிபிக் பகுதிக்குப் பிரதிநிதி என்ற முறையில் நிர்வாகக்கமிட்டி அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமெரிக்காஸ்-இன் பிரதிநிதியாக ஸ்ரீமதி ஸாரா C. கால்டுவெல்-உம் ஐரோப்பாவிற்கும் அண்மைக்கிழக்குநாடுகளுக்கும் பிரதிநிதியாக திரு. டெனிஸ் ஃபாரஸ்டீர் என்பாரும் நிர்வாகக்கமிட்டி அங்கத்தினர்களாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1964 பிரதிநிதிகள் மகாநாடு ஃபிரான்ஸில் உள்ள பாரிஸ் நகரில் கூடவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது, அது 1964 ஜூலை 31-முதல் ஆகஸ்டு 6-வரை நடைபெறும். உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் ஐக்கிய நாடுகளைப்பற்றிப் பெறவேண்டிய அறிவினைக் கல்விமூலம் மிகுதிப்படுத்துவது-என்னும் பொருளைப்பற்றி அம் மகாநாடு ஆராயும். 1965-ஆம் ஆண்டு மகாநாடு கானு நாட்டிலுள்ள ஆக்ரா (Accra) நகரில் கூடுதல் வேண்டும் என்று பிரதிநிதிகள் தீர்மானித்தனர்.

இம் மகாநாட்டின் முடிவுக்கூட்டத்தில் பிரஸங்கம்செய்தவர் கவர்னர் - கார்வோஸ் லாஸர்டா-(ரியோ-டி ஜனிரோ என்னும் நகரத்தைத் தன்னகத்தே உடைய கௌனு பாரா இராச்சியத்தின் கவர்னர்).

ஐக்கிய அரபுக்குடியரசின் கல்வியமைச்சரும் எகிப்து ஆசிரியர் ஸிண்டிகேட்டின் உபதலைவருமான மேன்மைதங்கிய எல்-ஸையத் யூஸுஃப் என்பவர், பாரிஸ்நகரில் 1964-இல் கூடப்போகும் மகாநாட்டில் தம் சங்கம் WCOTP-யோடுபிணைக்கப்படலாமென்று தாம்சிபாரிசுசெய்யப்போவதாகக் கூறினர். இராக் நாட்டின்கல்வியமைச்சரும் அந்நாட்டு ஆசிரியர்சங்கத்தின்

தலைவருமான மேன்மைதங்கிய அஹமத் அப்துல்ஸத்தர் ஆல்-ஜவாரி என்பவர் ஆசிரியர்சங்கங்களுக்கு இடையே உள்ள தொடர்பும் கூட்டுறவும் இன்னும் நெருங்குதல்வேண்டும் என்பதனை வற்புறுத்தினர்.

மகாநாட்டு முக்கியப்பிரசங்கங்கள்

ஸர் ரோனல்டு கௌல்டு

இம் மகாநாட்டில் WCOTP-இன் தலைவரான ஸர் ரோனல்டு கௌல்டு, "நல்ல இயற்கைச்சூழ்நிலை, போதுமான ஆசிரியர்-தொகை, தகுதியுடைய நல்ல ஆசிரியர்கள் ஆகிய மூன்றும் இருந்தால்தான் முதல்தரக் கல்வி அளித்தற்கு இயலும்"—என்று கூறினர்.

[இவ் வறிஞருடைய விரிவுரைமுழுதும் நம் பாலர் கல்வியின் சென்றமாதவிதழிலும் இம்மாதவிதழிலும் விரிவாக ஒருசிறிதும் விடாமல் வெளியிடப்பட்டுள்ளதை அனை-வரும் அறிவர். அவ் விரிவுரையை அனை-வரும் அவசியம் பலமுறை படித்தல் வேண்டும்.]

வில்லியம் G. கார்

WCOTP செக்ரடரி-ஜனரலான Dr. வில்லியம் G. கார், 1964 ஆம் ஆண்டு மகாநாட்டில் ஆராய்தற்கு எடுத்துக்கொள்ளப்போகும் பொருளை அறிமுகப்படுத்தும் பொழுது, "ஐ. நா. அமைதிக்குரிய கருவி. அதனைப் பயன்படுத்தும் முறை கற்பிக்கப்பட்டவர்க்கும், அதனைப் பயன்படுத்துதற்கு விருப்பமுள்ளவர்க்குமே அது பயன் படும்" என்று கூறினர்.

"1945 மார்ச்சில் ஸான் பிரான்ஸிஸ்கோ-வில் நடைபெற்ற மகாநாட்டைப்பற்றி டாக்டர் கார் விரிவாக, விளக்கமாக எடுத்துரைத்தார். அம் மகாநாட்டில் 1600-க்கு மேற்பட்ட பிரதிநிதிகளும் அவர்களுக்கு உதவியாகவந்த பல தொழிற்றுறையறிஞர்களும் சேர்ந்து, ஐக்கிய நாடுகளின் சாஸனத்தைத் தயாரித்தனர்.

" தொடர்ந்து செய்யவேண்டிய பணிகளுள், ஐ. நா. - வையும் ஐ. நா. சாஸனத்தையும் படைத்தற்குச் செய்த முயற்சிகளும் தியாகங்களும் முதல்வகையைச் சார்ந்தவை. மேலும், மக்கள் — முக்கியமாக ஆசிரியர்கள் — செய்யவேண்டிய பணிகள் நான்கு. முதலாவது, **பொருள்**: ஐ நா.-ஐயும் அதன் சிறப்பான 'ஏஜென்ஸி'களையும் நடத்தப் பெரும்பொருள் வேண்டும். நாம் கொடுக்கும் வரியிலிருந்து அரசாங்கங்கள் அப் பொருளை உதவுதல் வேண்டும். ஆயினும், ஒவ்வொரு குடிமகனும் உதவும் பொருள் மிகக் குறைவானதே. இரண்டாவது உலகமகாயுத்தத்தில் ஒரு நாளைக்குச் செலவிட்ட தொகையை வைத்துக்கொண்டு ஐ. நா. நிர்வாகத்தை ஓராண்டு நடத்தலாம்.

" இரண்டாவது, **காலம்** : ஐ. நா.-வைப்பற்றிய நூல்களைப் படிக்கவும், பயிலவும், அதனைப்பற்றி அறியவும் கற்பிக்கவும் ஒவ்வொருவரும் ஒருசிறிது காலத்தை உதவுதல் வேண்டும்.

" மூன்றுவது, **சிந்தனை** : ஐ. நா. உலகத்திலுள்ள துன்பங்களையெல்லாம் ஒழித்தற்கு அரும்பாடுபடுகின்றது. பசி, அறியாமை, நோய், வலிமையுள்ள நாடு எளிய நாட்டினைத் தாக்குதல் போன்ற அப் பிரச்சினைகளைப்பற்றி நேரிய முறையில் மக்கள் ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும்.

" அமைதியை உலகத்தில் நிலைநிறுத்தற்குச் செய்யவேண்டிய நான்காவது பணி, **உலகியலை அறிந்துகொள்வது**. பிறநாட்டுமக்கள் வாழும் முறை, வணங்குங் கடவுளர், உயர்வாகக் கருதுங் குறிக்கோள்கள், தீர்க்கவேண்டிய பிரச்சினைகள், அவர்கள் பெற்ற உரிமைகள், பெருத உரிமைகள் —இவற்றைப்பற்றி அருள்மனப்பான்மையோடு ஆழ்ந்து ஆலோசித்து உலகியலை நன்கு உணர்தல் வேண்டும். உணர்தல்வேண்டும் என்பதனுல், நீங்கள் அவற்றை விரும்புகின்றீர்கள் என்றோ, ஆதரிக்கின்றீர்கள் என்றோ அர்த்தமில்லை. ஆயின், பின்னுல் தோன்றஇருக்கும் பிரச்சினைகளைத் தீர்த்தற்கு இது முதற்படியாகும்.

" ஆதலின், 1964-க்குரிய இப் பொருள் மிக முக்கியமானது. நாம் ஐ. நா.வைப்பற்றி எல்லா நாடுகளும் நன்கு அறியுமாறு கற்பித்தால், மனிதவினத்துக்கே நேரப்போகும் மிகக்கொடிய ஆபத்துக்களினின்றும் காக்க நம் கடமையைச் செய்தவராவோம். இதனைக் கற்பிக்காவிடின், நாம் கற்பிக்கும் பிறவற்ருல் மிக்க நன்மை விளையாது" என்று அவர் கூறினர்.

டெனிஸ் பாரஸ்டீர்

WCOTP நிர்வாகக்கமிட்டியின் அங்கத்தினரான திரு. **டெனிஸ் பாரஸ்டீர்** என்பவர் (பிரான்ஸ்), ரியோ நகரில் நடைபெற்ற மகாநாட்டில், " முதல்தரக் கல்விபோதனைக்கு உரிய வேலைநிலைகள் " என்னும் ஆராய்ச்சித்தலைப்பைப்பற்றிப் பேசிய முன்னுரையில், பின்வருமாறு கூறினர்: "உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் முதல்தரக்கல்வியையும் அக் கல்விபோதனையையும் அடைதற்கு இதுவரை ஒருபொழுதும் இல்லாத ஆவலோடு இருக்கின்றன. காலத்துக்கேற்றவாறு அனுசரித்துக் கல்வியைப் பரப்புதற்கும், உலகம்முழுதும் சக்திக்குத் தக்கவாறு குழந்தைகளை

வருக்கும் சமவாய்ப்புக்களை அளித்தற்கும் உறுதிகொண்டுள்ளது. இவ்வாறு கல்வியை எல்லாக் குழந்தைகளும் பெறுதல் வேண்டுமாயின், சமூகத்தில் உயர்வுதாழ்வு மனப்பான்மை ஒழிதல்வேண்டும். கல்வியிலுள்ள எல்லாத்துறைகளுக்கும் எல்லா நிலைகளிலும் முதல்தரக் கல்விபோதனை இருக்குமாறு செய்வதே இந் நிலையைச் சமாளித்தற்கு வேண்டிய முதல்நிபந்தனையாகும். அதற்கு மூன்றுவகைக்கொள்கைகள் வேண்டும். முதலாவது, மனித கௌரவத்திற்குரிய கொள்கை. தனிமனிதனுடைய மனப்போக்கினையும் சக்தியையும் வளர்த்தல், சமூகத்தில் நன்கு வாழப் பயிற்சியை அளித்தல், ஒழுக்கத்தையும் ஆண்மையையும் வளர்த்தல், தங்களுடையதும் மனிதவினத்தினுடையதுமான பரம்பரைப்பண்பாட்டுச்செல்வத்தைப் போற்றிப் பாதுகாத்து மிகுவித்தல், சகோதரத்துவம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை உலகநாடுகளைப்பற்றிய உண்மையறிவு இவற்றினுக்கு ஊக்கம் அளித்தல், பாரபட்சச்செயல்களைக் கண்டித்தல் ஆகிய இவைகளே அக் கொள்கைகளாகும்.

இரண்டாவது அரசாங்கக் கொள்கை: கௌரவம் அடிப்படை மனிதவுரிமைகள் ஆகியவற்றினுக்கு மரியாதைகாட்டும் மனப்பான்மை படியும்படி செய்தல், குடியரசுமனப்பான்மையை வளர்த்தல், குடிமக்களின் கடமைகளையும் உரிமைகளையும் அறியும்படி செய்தல், விவேகம் ஆராயும் அறிவு கற்பனைசக்தி இவற்றை உடைய மக்களாக்குதல், தேசீய ஒற்றுமை உண்மையான நாட்டுப்பற்று பிறநாடுகளை மதித்தல் ஆகிய பண்புகளை ஊக்குதல் முதலியவைகளே அக் கொள்கைகளைச் சார்ந்தவையாகும்.

மூன்றுவது, பொருளாதார சமூகக்கொள்கை: மக்கள் தம் வாழ்க்கைக்கு வேண்டிய பொருளைக் கௌரவமான முறையில் தேடுதற்கு உதவுதல், நாட்டுக்கு இன்றியமையாத தனிச்சக்திகளை வளர்த்தல், சமூகத்தில் காணப்படும் விஞ்ஞானத்தொழிற்கலைப்புரட்சிக்கு ஏற்றவாறு தம்மை அமைத்துக்கொள்ளுதற்குப் போதுமான பயிற்சியை அளித்தல், உடலையும் மனத்தையும் வளர்த்தல், ஓய்வுக்காலத்தை அதிகக் கல்வியறிவுபெறுதற்குப் பயன்படுத்துதல் முதலியவையே இப் பகுதியைச் சார்ந்தவை.

முதல்தரக்கல்விப் போதனைக்கு முக்கியமாக வேண்டுபவர் முதல்தர ஆசிரியர்களே. நல்லாசிரியர்ஒருவர் இதயப்பண்புகளும் நூலறிவும் போதனுமுறையைப்பற்றிய அறிவும் உடையவராய் இருத்தல்வேண்டும்; எக்கல்வியைப் போதிப்பினும், தம்மால் முடிந்ததைச் செய்தல் வேண்டும். பிறர்க்கு நன்மைசெய்ய எண்ணுதல், தன்னலம்பாராமை, சூழ்நிலையை அறிதல், மனிதனுக்குரிய மரியாதையைச் செலுத்துதல், தன்மானம்உடைமை, தன் பொறுப்புக்களை உணர்தல், தனக்குப் பிறர் பாராட்டுமாறு வாழ உறுதிகொள்ளுதல் - ஆகியவைகளே அவ்விதயப்பண்புகளாகும்.

இந்த மகாநாட்டுவிஷயத்தைப்பற்றி ஆராய்ந்து வெளியிட்ட அறிக்கைகளில் வற்புறுத்திக் கூறப்பட்ட செய்தியாவது, கல்வியைப்பற்றிப் பொதுமக்களுக்கு உயர்ந்த மதிப்பு உண்டாகுமாறு செய்வதேயாகும். இப்பொழுது கல்வியில் உலகமக்களுக்கு மிக்க வேட்கை காணப்படுகின்றது. அவ் வேட்கையைத் தணிப்பதற்குரிய முறைகள் அவ்வந்நாட்டுநிலையைப் பொறுத்து மாறுபடும்.

பொதுக்குறிக்கோள்களை அடைதற்கு நாம் கஷ்டமான பாதையில் செல்கின்றோம். சுதந்திரமும் கௌரவமும் உள்ள மக்களிடையே ஒற்றுமை-மனப்பான்மையை வளர்த்தல், தற்காலத்துக்கு வேண்டியவற்றைச் செய்தல், சென்ற காலத்தில் உள்ள ஆக்கப்பயன்களைப் புறக்கணிக்காமல் எதிர்காலத்தைப்பற்றி ஆராய்தல், பலவகை அநீதிகளைக் கண்டித்தல் இவைகள் இன்றியமையாதவை. ஆசிரியர்க்கு உரிமையும் கௌரவமும் அளிக்கப்படவில்லையாயின், மனிதசமூகத்துக்கு உரிமையையும் கௌரவத்தையும்பற்றிக் கற்பித்தல் பயனற்ற செயலாகும்.

இக் கடுமையான வேலையைச் செய்தற்கு ஒவ்வொரு ஆசிரியரும் தனித்துச் செய்யும் முயற்சி இன்றியமையாதது. ஆசிரியர்கள் தங்கள் நாட்டளவிலும் சர்வதேசநிலையிலும் ஒன்றுபட்டுச் சங்கங்களை நிறுவுதல் வேண்டும். அச் சங்கங்கள் இத்தொழிலில் ஈடுபட்ட மக்களின் உண்மைப்-பிரதிநிதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். இத்தகைய சங்கங்கள்மூலமாகவே மேற்குறிக்கப்பட்ட கல்விக்குறிக்கோள்களை அடைதல் இயலும்.

வெற்றியடைவோம் என்னும் நம்பிக்கையும் தளராத ஊக்கமுமே இடையூறுகளைப் பொருட்படுத்தாமல் முன்னேற வேண்டிய இப்பெரும்பணிக்கு இன்றியமையாதவையாகும். இவ்விரு பண்புகளையும் குழந்தைகள்மனத்தில் வேரூன்றச் செய்தல் வேண்டும்.

திரு. K. ஹெல்வெக் பீடர்ஸன் :

திரு. K. ஹெல்வெக் பீடர்ஸன் டென்மார்க் தேசத்துக் 'கல்வியமைச்சர்; 'வில்லியம் F. ரஸ்ஸல்' பரிசினைப் பெற்றவர். அவர் WCOTP-பன்னிரண்டாம் பிரதிநிதிகள் மகாநாட்டில் பின்வருமாறு பிரசங்கஞ் செய்தார்:

"கல்விப்பணியை நன்கு முடித்தற்கு ஐ. நா. தினத்தைத் திருவிழாவாகக்'கொண்டாடிக்-ஞல்மட்டும் போதாது. பள்ளியில் கற்பிக்கப்படும் பலவேறு பாடங்களோடு, ஐ. நா.-வைப்பற்றிய செய்திகளையும் இணைத்துக் கற்பித்தல் வேண்டும்.

"சர்வதேசங்களையும்பற்றிய அறிவை வளர்த்தற்குச் சரித்திரமும் பூகோளமும் மிகச்சிறந்த வாய்ப்பினை அளிக்கின்றன. மனிதவினத்தின்

நாடகம் நிகழ்தற்கு உரிய இடத்தைப் பூகோளம் விவரித்துக் கூறுகின்றது என்றும், அவ்வக்காலச் சரித்திரம் அந் நாடகத்தை அளிக்கின்றது என்றும் கூறலாம். தன் நாடும் பிரதேசமும் இனமும் பண்பாடுமே பிற நாடுகளைக்காட்டிலும் உயர்ந்தவை என்று எண்ணும் குறுகிய மனப்பான்மையை மாணுக்கர் பெருதவாறு சரித்திரபோதனை காத்தல்வேண்டும். ஐ. நா.வைப்பற்றிய போதனை, அநுபவத்தை ஒட்டி, உயிருள்ளதாய் இருத்தல் வேண்டும். அச் சர்வதேசச்சங்கத்தின் குறிக்கோள்களை நன்கு விளக்குதற்கு ஆசிரியர்கள் முயலல்வேண்டும். அன்றியும், ஐ. நா.-வின் திட்டங்களும் கொள்கைகளும் ஆண்டுதோறும் விரைந்த முன்னேற்றத்தை அடையாமல் இருத்தற்குத் தடையாக இருக்கும் இடையூறுகளையும் கஷ்டங்களையும் சுட்டிக்காட்டுதலும் வேண்டும்.

"உலகிலுள்ள எல்லா நாடுகளும் பரஸ்பரம் உணர்தற்கு மிகப்பரந்த வாய்ப்புக்களும் சக்திகளும் இருக்கின்றன. Unesco, WCOTP, கல்வியமைச்சர்கள், உள்ளூர் அதிகாரிகள், ஆசிரியர்சங்கங்கள், பாடப்புத்தகங்களைப் பிரசுரிப்போர், நூலாசிரியர்கள் ஆகிய எல்லாருடைய உதவியையும் ஆசிரியர்கள் நாடிப்பெறுதல்வேண்டும். ஆசிரியர்களையும் மாணுக்கர்களையும் கடிதங்களையும ஒலிப்படங்களையும் பிற போதனுமுறை உபகரணங்களையும் நாட்டுக்குநாடு மாற்றிக்கொள்ளல்வேண்டும். உலகநாடுகள் பரஸ்பரம் உணர்ந்துகொள்ளுதற்கும், பொருமைகளினின்றும் காத்தற்கும் சிறந்த கருவியாயிருப்பது திறந்த பரந்த மனமேயாகும். ஐ. நா.-வைப் பற்றிய எல்லாச்செய்திகளையும் கற்பித்துவிட்டோம் என்று எவரும் கூறுதல் இயலாது."

அவ்வமைச்சர், ஆகஸ்டு 14-இல் ரியோ நகரில் கூடிய சுகாதாரக் கல்வியைப்பற்றிய WCOTP-ICHPER கலையரங்கில், "குழந்தைகளின் சுகாதாரத்தை வளர்த்தற்குப் பள்ளிகளுக்குரிய கடமை" என்னும் பொருள்பற்றிப் பிரசங்கஞ்செய்தார். "உலகம்முழுதும் சுகாதாரக்கல்வி பள்ளிப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாய்ச் சேர்க்கப்பட்டுள்ளதைப்பற்றி ஆசிரியர்சங்கங்களைப் பாராட்டுகின்றேன். சுகாதாரத்திற்கும் கல்விக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதனையும், பள்ளிக்கூடங்கள் குழந்தைக்குப் பாடங்களைக் கற்பிப்பதற்குமட்டுமன்றி, அது முழுவளர்ச்சியைப் பெறுதற்கும் உரிய பொறுப்பினை ஏற்றுக்கொள்ளல்வேண்டும் என்னும் உண்மையையும் நெடுங்காலமாக ஆசிரியர்களுள் பெரும்பாலோர் உணர்ந்துள்ளனர்."

ரியோ மகாநாட்டில் ஆசியப்பிரதிநிதிகளின் கூட்டத்தில், தாய்லாந்து கல்விச்சங்கம், தனியார்பள்ளிஆசிரியர்கள் சங்கம் என்னும் இவற்றின் பிரதிநிதியாய் வந்த Dr. தம்ராங் புவஸ்ரீ என்னும் அறிஞர், 1964-ஆசிய பிரதேச மகாநாடு அவ்வாண்டு பிப்ரவரி 16-23-இல் பாங்காக் நகரில் ஸாலா ஸந்தேதம் அளிக்கும் வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு கூட்டப்படும் என்று அறிவித்தார்.

Dr. புவஸ்ரீ, ரியோ மகாநாட்டிற்கு விஜயஞ்செய்திருந்த ஆசியப்பிரதிநிதிகளனைவரையும் அக்கூட்டத்திற்கு வருமாறு வேண்டிக்கொண்டார். அந்தக் கூட்டத்தில் ஆராயப்படும் பொருள் 1964-WCOTP-மகாநாட்டின் பொருளேயாகும்.

உலகநாடுகள் பரஸ்பரம் அறிந்துகொள்ளுதற்கு, WCOTP-யின் உறுப்புச்சங்கங்கள் முயன்று கொண்டுவருந் திட்டங்களின் வகைகளுக் குரிய உதாரணங்களை அம் மகாநாடு கொடுக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

ஆஃப்ரிகா :-



WCOTP-தலைமைக் காரியாலயம், உகாந்தா ஆசிரியர்சங்கத்தின் புதிய சஞ்சிகையான **உகாந்தா ஆசிரியர்** (The Uganda Teacher) என்பதன் முதல்வெளியீடு அடையப்பெற்றது.

UTA-பிரஸிடெண்ட்-ஜெனரலான திரு. J. B. K. ஸெந்தமு என்பாரும் சமூகவளர்ச்சியமைச்சரும் UTA முன்னுள் பொதுக் காரியதரிசியுமாகிய மேன்மைதங்கிய L. கலுலே ஷெடலா என்பாரும், UTA பொதுக்காரியதரிசியாகிய திரு. ஜான், F. கிஸாகா என்பாரும், கிளைச்சங்கத் தலைவர்களும் காரியதரிசிகளும் அச் சஞ்சிகையின் ஜூலை வெளியீட்டுக்கு நற்செய்திகள் அனுப்பியுள்ளார்கள். ஆசிரியர்கள் தங்கள் தொழிலுக்குத் தொடர்புள்ள செய்திகளையும் கருத்துக்களையும் ஒருவர்க்கொருவர் கூறிக்கொள்வதற்குப் பயன்படுத்துவதே இச்சஞ்சி-கையின் குறிக்கோள்.

ஸ்ரீமதி ஜாய்ஸ் **மாஸம்பி** (உகாந்தா), உகாந்தா நாட்டின் கம்பாலா நகரில் ஸெப்டெம்பர் 9–14-இல் கூடிய Unesco–வோடு சம்பந்தப்பட்ட ஆஃப்ரிக்க தேசியக்கமிஷன்களில் முதல் பிரதேச மகாநாட்டிற்கு WCOTP-யின் பிரதிநிதியாக வந்திருந்தார். அவர் UTA-யின் உபதலைவர்.

———

ஸெனிகல் நாட்டின் கல்வியமைச்சர் அடுத்த பள்ளிக்கூட ஆண்டு-முதல் எல்லா அரசாங்கக் கலாசாலைகளிலும் அரபிமொழியைக் கற்பித்தல் வேண்டும் என்று தீர்மானித்துள்ளார். அரபு தேசங்களில் அரபிமொழியைப் படிக்கும் ஸெனிகல் மாணுக்கர்க்குப் பயன்படும்படி ஸெனிகல் அரசாங்கம், 400,000 பிராங்குகளை ஒதுக்கி வைத்துள்ளது.

———

கல்வியமைச்சரான J. D. ஓடியண்டே என்பார் இவ்வாண்டில் கென்யா நாட்டின் பொதுத்தொண்டுகளுக்காகச் செலவிடப்படுஞ் செலவுத்தொகையின் இருபத்துமூன்று சதவிகிதம் கல்விக்குப் போகும் என்று அண்மையில் நைரோபியில் கூறினர். நாட்டுவாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் வளர்ச்சியும் முன்னேற்றமும் அடைவதற்கு

அடிப்படையாதாரமாக இருப்பது கல்வியே என்று அப் புது அரசாங்கம் நன்கு உணர்ந்திருப்பதனுல், கல்வியின் முன்னேற்றத்திற்கு முதலிடம் அளிக்கப்படும் என்று அவர் கூறினுர்.

———

ஆசியா:-

WCOTP-யின் நிர்வாகக்கமிட்டியில் உள்ள எல்லா ஆசிய அங்கத்தினர்களேயும், அச் சங்கத்தின் காரியதரிசியின் காரியாலயத்தின் பிரதிநிதி ஒருவரையும மூன்று ஆண்டுகள் அங்குத் தொண்டுசெய்தற்கு நிர்வாகக்-கமிட்டியால் நியமிக்கப்பட்ட வெளியங்கத்தினர் மூவரையும் கொண்டது WCOTP-யின் ஆசியக்கமிட்டி என்று ரியோ மகாநாடு முடிவுசெய்தது.

புதிதாய் அமைக்கப்பட்ட இந்த ஆசியக்கமிட்டி WCOTP-யின் தலைமைக் காரியாலயத்திற்கு, ஆசியாவில் WCOTP-யால் நிறைவேற்றப் படவேண்டிய திட்டங்கள் யாவை என்பதனேக்குறித்து அறிவுரை கூறுதல் வேண்டும். ஒரு தனி ஆசிய கொள்கைக் கமிஷனே அமைப்பதாக எண்ணி-யிருந்தனர். அவ்வெண்ணம் கைவிடப்பட்டது. இந்த ஆசியக் கமிட்டி அக் கமிஷன் செய்யவேண்டிய பணிகளேயும் செய்தல் வேண்டும். இந்த ஆசியகமிட்டியின் புதிய அமைப்பு WCOTP-யின் நிர்வாகக்கமிட்டி-யினுல் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது.

இந்த ஆசியகமிட்டியில் தொண்டாற்றும் WCOTP-யின் நிர்வாக அங்கத்தினர் கீழ்க்குறிக்கப்படுவோராவர்: ஸ்ரீ நடராஜன், இந்தியா, 1963 65; திரு தாய் ஸீ சுங், கொரியா, 1963-65; திரு கூயன் கூ சின், வியட்நாம், 1962-64.

நிர்வாகக்கமிட்டியினுல் நியமிக்கப்பட்ட வெளியங்கத்தினர் மூவரும் அவர்கள் பணியாற்றுங் காலமும்: திரு. ஜார்ஜ் ஆஷ்பிரிட்ஜ், நியூஸீலண்ட், 1961-64; திரு சதாமிட்ஸு மியஞேஹரா, ஜப்பான் 1962-65; திரு. அப்துல் மன்ஞன், பாகிஸ்தான், 1963-66.

WCOTP காரியாலயப் பிரதிநிதி, ஆசியாவின் தனி அஸிஸ்டன்ட்டாக இருக்கும் வில்லியம் உல்வ் என்னும் அறிஞர்.

அரபு இராச்சியங்கள்

அல்ஜீரியா ஆசிரியரின் முதல்மகாநாடு அல்ஜீரியா பல்கலைக்-கழகத்தில் ஜுலை 2-4-இல் கூடிற்று. கல்வியமைச்சர் திரு. அப்துல் ரஹ்மான் ஹமீது அம் மகாநாட்டைத் திறந்துவைத்தார்; அல்ஜீரியா நாட்டின் மக்கள் எழுதப் படிக்கத் தெரியாமல் இருக்குங் குறையை நீக்கு-தற்கு வேண்டிய பாடத்திட்டத்தையும் பொதுத்திட்டங்களேயும் வகுப்ப-தைப்பற்றி அம் மகாநாடு ஆராய்ந்தது.

அம் மகாநாட்டிற்கு அரபுதேசங்களிலிருந்து பல பிரதிநிதிகள் விஜயஞ்செய்திருந்தனர். WCOTP பாரிஸ் நகர அலுவலகத்தின் டைரக்டரான திரு. வில்ஹெம் ஈபர்ட் என்பார் WCOTP-யின் பிரதிநிதியாக அங்கு வந்திருந்தார்.

லியோபோல்டுவில்லியில் உள்ள அலுவலகப்பள்ளிகளில் பிரெஞ்சு-மொழியைக் கற்பித்தற்கு லெபனன் நாட்டிலுள்ள – பிரெஞ்சுமொழியில் பேசும் ஆற்றல் பெற்ற-ஆசிரியர் குழுவொன்று ஆகஸ்டு முதல்வாரத்தில் காங்கோவிற்குச் சென்றது. லியோபோல்டுவில்லி - காங்கோவின் மத்திய அரசாங்கத்தின் கமிஷன் அங்கத்தினர்கள் பீரட் நகரத்திற்கு விஜயஞ்-செய்ததற்குப் பின்னர், லெபனன் நாட்டு ஆசிரியர்களுள் பெருந்தொகை-யினர் காங்கோ நாட்டில் கற்பிக்கும் பணியை மேற்கொள்ள விரும்பி மனுச் செய்துகொண்டனர்.

———

தாய்லாந்து நாட்டின் மத்திய மாகாணமாகிய நகோர் ஸ்வான்-இல் உள்ள போதிஸரன் பள்ளி நாடகவரங்கில் தாய்லாந்துநாட்டுச்சங்கம் அண்மையில் ஒரு கூட்டம் கூட்டிற்று. அங்கு ஆராயப்பட்ட விஷயம், 'முதல்தரப் போதனமுறைக்கு வேண்டிய வேலைநிலைகள்' என்பதாகும். அவ் வாக்குவாதத்தில் ஏறத்தாழ 1600 அறிஞர்கள் கலந்துகொண்டனர். ஆங்கு, முறை, முயற்சியால் கிடைத்த பலன், தொழிலில் உள்ள ஊக்கம், சமூகத்தைப் பற்றிய உணர்வு முதலியவை விவாதிக்கப்பட்டன. இது, ஆசிய ஸ்தாபனத்தின் ஆதாவைப் பெற்ற, சுற்றுப்பிரயாணச் சொற்பொழிவுத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இடமிருந்து வலம்: Dr. தானூ ஸ்வேங் சுப்தி, Dr. சுரங் கொத்ரகுல், Dr. தம்ராங் புவஸ்ரீ, Dr. சாய்சூரி வஜ்ஜரகியத், Dr. சாய் பானுரத்ன.

———